Nallur Branch Libra

**Subscription.**

**Inland: Rs. 100/- year**

**For Advertisement**
**Apply to:**
**The Manager,**
**'The Morning Star,'**
**182, First Cross Street**
**JAFFNA.**

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89

**Established : 1841 : A Christian Weekly: Published Every Friday**

**Vol:- 150 Jaffna, Friday 16 March 1990 No:- 11**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**News and Articles in Tamil and English. Please send them to**

**THE EDITOR,**
**'The Morning Star,'**
**182, First Cross Street,**
**JAFFNA.**

## Women's World day of Prayer

The Women's Fellowship of the Diocese had a whole day's programme on March 2nd 1990. The morning began with a worship service at the Women's Centre Chapel, Maruthanamadam, conducted by Mrs. A. R. Tambiappa. About 50 women from 15 parishes participated. This was followed by a very thought provoking Bible study led by the Rev. Dr. Henry Victor of the Jaffna University on "Christian self understanding in a Multi Religious Society". Many seem to have had their traditional beliefs and attitudes shaken.

The Women's centre hosted those present at lunch. After lunch those present were taken to Inuvil to visit Mc Leod hospital, House of Hope and the newly opened Day care centre. Later the Mission Sales Centre opposite the hospital which was closed since the IPKF offensive was ceremoniously opened by Mrs. S Somasundaram (former Principal of Uduvil girls English School). This sales centre will be managed by the Women's Fellowship. The Women's World-Day of Prayer service was then held at the Uduvil Church at 3 p m. The order of service this year was made out by the Women of Czechoslavakia. The women of Uduvil parish and the school led the service backed by the choir of Uduvil Girls School who provided us with good music and singing. The Rev. S. Balasingo Vicar of St. John's Chundikuli, gave the message on "Peace and a bright future".

The day came to an end with Fellowship tea at the Parish hall.

## Bible Study – on Women's World Day of Prayer–

**-by Rev. Dr. Henry Victor–**

### Christian Self – Understanding in a Multi– Religious Society.

There has been much soul searching on the part of all Christians ever since the Roman Catholic Church through the Second Vatican Council (which met during the period 1952- 1965) issued. on 28 October 1965, the Nostra Aetate, the declaration on "the relation of the Church to Non - Christian religions". In this document, about Islam, Hinduism, Buddhism and other world religions that are not Christian, we read the following;

> The Catholic Church rejects nothing of what is true and holy in these religions. She has a high regard for the manner of life and conduct, the precepts and doctrines which, although differing in many ways from her own teaching, nevertheless often reflect a ray of that truth which enlightens all men.

During the last thirty years or so the Christians, I believe with the help of the Spirit of God who guides us into new truths, have been exploring afresh the relevant Christian attitude towards their neighbours who do not share the same religious faith as theirs. In doing so they have also asked serious questions about themselves and their own faith.

It was the increased awareness of the multi - religious context with which went the Christian acknowledgement of the saving activity of God among the people outside the visible Church, the seriousness of the content of the other religions, the devotion and integrated commitment of the Muslims, Hindus, and Buddhist that prompted to change the self - understanding of Christians by re - discovering of certain neglected Biblical traditions. The change in Christian self - understanding, naturally, demands not only a change in Christian life style but also in our missiological models which the Church is slowly bringing about. It is precisely for this reason that the Christians speak of the concept - and pratice of dialogue with people of other religions. The World Council of Churches, for her part, has established in Geneva the unit on "Dialogue with People of Living Faiths" which at present is headed by the Rev. Dr. Wesley Ariarajah, a Methodist minister from Jaffna. The Catholics also have a similar centre to promote Christian dialogue with people of other faiths which functions from the Vatican city and is known as the Pontifical Institute for Inter-religious Dialogue. In that sense Christians, throughout the world, accept inter religious dialogue, with its varied dimensions, as an integral part of Christian life style and mission.

However, our concern here, this morning as we observe the "World Day of Prayer" is not to study the theory and practice of dialogue, which, of course, is a very important subject to study, but to explore certain Christian attitudes towards the people of other faiths that may help us to pray intelligently for these people. But before that we may want to note that the words such as "non-Christians" and "people of other faiths" are themselves inadequate to describe the devout Hindus, Muslims, or Buddhists and may express certain "un-Christian" attitudes towards them.

The following Bible passages, among many others, will help us to clarify attitudes that is required by a Christian who wants to take his/her multi religious context more seriously. (a) Amos 9:7. (b) John 21:20-22, 25. (c) Acts 5:33-40. Matthew 13: 24 30.

(a) Amos 9:7:- This is contrary to the concept of election found in Amos 3:2a which is often taken as the only emphasis in all the books of the Hebrew Scriptures. Over against the notion of "God's elect" here we read that God has no favourites. If the scholars use the term "particularism" for 3:2a, then they say "universalism" for 9:7. Particularism led to a narrow concept of God's activity while universalism demanded that we look beyond our boundaries as well and discern God's saving activity. God is the liberator. He liberated not only the Isrelites (from Egypt), but also the Philistines from Crete), the Syrians (from Kir), ... (the list, obviously, is not a complete one! It is possible to keep filling the list!) We may also note that the liberation of Philistines from Crete, the Syrians from Kir, and likewise, the others from other places, are not recorded in the Bible. The fact that these, (other liberative acts, apart from the liberation of the Isrelites), are not recorded in the Bible do not in anyway negate the liberation of the Philistines, Syrians, and others by God.

(b) John 21:25. We noticed, just above, that though, according to God, He/She was involved in the liberation of the Philistines and the Syrians, the Bible somehow has not recorded these activities of God. It is impossible. and perhaps not necessary, to record all acts of God's liberation. In other words, what is recorded in the Bible (and, therefore, what is known to us) is only a fraction of what actually happened (and happens). Acts of the Apostles is another good example for this. It only covers certain "acts" of Peter and Paul leaving the "acts" of James Thomas, John, and so on. There are many verses in the Bible that are similar to 21:25. For example read Colossians 4:16 in the light of recording God's acts! With 21:25, it will be ineresting to look at 21:20-22. Or may be we should have looked at that with Amos 9:7. Do not be jealous (like Peter! What about the Israelites in Amos 9:7 or Jonah!!), if God wants to bless someone else too with the same blessing with which God blessed you. Are we upset that Mahatma Gandhi may be in heaven, in spite of the fact that he was not baptised? Also, do not be impatient with God, if God deals with people by ways that you do not expect.

(c) Acts 5:33-40, Matthew 13: 24-30. Do not be quick to judge. Suspend all your condemnation. Wait! Wait!! And wait!!! Be cautious like Gamaliel. If you fight without knowing, you may end up fighting with God! Do not be arrogant. Do not be cock-sure. Learn to discern and discover God and God's ways of dealing among people with fear and trembling, for God's saving activities may take place in a variety of ways and in numerous places. The Bhagavad Gita, the sacred scriptures of the Hindus, says: "In any way that men love me in that same way they find my love: for many are the paths of men, but they all in the end come to me" (4: 11)

## The Eventful Eighties - the Decade that was

*What we call the beginning is often the end.*
*And to make an end is to make a beginning.*
*The end is where we start from.*

**— T. S. Eliot**

Another ten years have gone by - already a fleeting moment in history as we gaze into another decade stretching ahead of us. Whilst the past decade may be just a brief moment in the expanse of history it will probably go down on record as one of the most eventful of this century.

When the decade began there was more to be gloomy about than cheerful The only cause for joy seemed to be the release of the American hostages by Iran. The cold war was as entrenched as ever and in fact the temperature dropped even further with the inauguration of that trigger happy cold warrior Ronald Reagan in Washington and the continued succession of the ailing gerontocracy in Moscow. Regional conflicts raged with the super powers involved by proxy in most of them. Afganistan, Ethiopia, Nicaragua, Lebanon. Iran - Iraq were the main areas of major conflict. At the same time numerous other localised liberation struggles continued.

(See page 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OBITUARY:

Chandra Kulendran died on February 13 in hospital in Strasbourg (France), after a long illness. Her funeral service took place on February 19th at the Church of the Dominican Fathers the church in which the Anglican community in Strasbourg hold their regular Sunday Services. The Kulendran family have been regular members of the Anglican congregation since their arrival in Strasbourg.

The service was attended by about 100 People with several members from the family of Chandra and her husband Jothy who was accompanied by their children Gihan and Priscilla. The Sri Lankan Community was well represented. People had travelled long distances not only from other parts of France and from Great Britain but also from other continents - Canada and Sri Lanka. Among the Anglican congregation there were not only many of Chandra's friends from Britain but also some members from Africa and North America. It was therefore a service which was truly worldwide. It was conducted both in English and Tamil.

Canon Barney Milligan, the Anglican chaplain, led the service with the Revd. John Murray, assistant chaplain, who read the lesson in English and led the prayers. The lesson in Tamil was read by Mathus Johan and prayers in Tamil were led by Packiyaraja Soosai. The Tamil choir was accompanied on the violin by Mrs. Gowri Bonney and a solo in Tamil was sung by Mrs. Shanthy Sathiyathayalan. Mr Norman Oakley was the organist. Around the coffin there was a mass of flowers given in tribute by family and friends.

In his sermon, Canon Milligan spoke of his own personal friendship with Chandra, in which, as he said, he knew he was speaking for many others. He declared that even when Chandra was having a bad time or suffering pain, he had never been to visit her without feeling refreshed and invigorated by her company. The courage and the spirit of Chandra were not only something we remembered; not only something we thanked God for today; but also a continuing enrichment of our lives now and in the future. This was what life in the spirit of God was all about. This was a sign of living the risen life of Christ.

The burial took place at Cronenbourg cemetery, in the presence of nearly all the congregation who had been at the church service. Each person present, including the children, individually paid their final, affectionate respects to Chandra at the graveside.

## News from England.

### The colour of a person's skin.

There are very few countries in the world that can claim to be free of racist attitudes. Almost every society has its reservations and hostilities to those who are of a different color, language or religion. Each is bad as the other though some how differentiating between peoples on the basis of their physical appearance seems even more abominable. Which is why apartheid in South Africa has long been a focus of international opprobrium despite the fact that many other countries are much worse with regard to human rights abuses.

Here in Britain, however much it is denied, racist attitudes persist. So much so that a special body exists to look into complaints of racial harassment and discrimination. The perception of such attitudes were recently reinforced by the furore raised. when the government announced that 50,000 Hong kong Chinese would be allowed to enter Britain prior to the Chinese take over of the island. Several Tory MP's and others denounced the move and refused to allow the Chinese to enter their Constituencies. Mind you-these Chinese are British Passport holders. However when the government recently announced that upto 500,000 whites in South Africa would be eligible to enter Britain as British citizens there was not the least murmur of disapproval. Oh, well .. if you are white and Anglo-Saxon alls well Jack!!

## OBITUARY:

We regret to record the death which occurred at Manipay in the early hours of Wednesday the 28th of February 1990 of Mrs Grace Manonmany Thevasagayam of Erlalai South.

The funeral Services were held at the parsonage Manipay on Thursday the 1st of March and at Erlalai, on Saturday the 3rd March 1990. At Manipay the Rev. V. N Tharmakulasingam conducted the Service and at Erlalai the Rev. D. R. Ampalavanar the Circuit Pastor conducted the service. The Rev. A. V. Jesuthasan paid the tribute. The Rev. D. S. Thiagarajah preached the Sermon. Special anthems were sung by the Manipay church Choir and by the Christian Theological Seminary Choir.

The Committal rites were performed by her youngest son, the Rev. Thevanesan. The deceased leaves behind besides her husband, Two sons, Two daughters and grand Children.

## OBITUARY.

Mr. Sam J. Kadirgamar, Q. C died in India on Monday the 12th. of February. His body was flown to Sri Lanka and cremated at Kannatte on Thursday the 15th.

He was an eminent member of the Sri Lankan Bar for nearly five decades. 15 years after he joined the Bar, he was called to the English Bar by the Inner Temple.

Mr. Kadirgamar was 72 years old and had an outstanding career at Royal College having won the Don Horst and J.E.R Perera's memorial prizes for reading, the. Sir Ponnambalam Arunachalam prize and the Cecil Perera memorial prize for History.

He was reputed to have had one of the finest collections of Ceylon Books.

A reputed jungle man who made his mark as a fine Rifle Shot had to bring down the bull elephant that threatened to break free from the stockhade built for Pannamura Elephant Kraal.

He was an athlete, Golfer and accomplished soccer player.

He was the eldest son of the late Mr. Sam. J. C. Kadirgamar, proctor and founding member of the firm "Wilson & Kadirgamar", and the late Mrs. Parimalam Kadirgamar (Nee Mather). He is survived by his wife Saro (Nee Navaratnam) and son Arrjuna and daughter Sakunthala Rajasingham who have settled down in the States. His sister Iswari was married to the late Dr. Dharman Richards. There of his brothers Selvan, Rajan(Rear Admiral in the Sri Lankan Navy) and Thirumalanathan (Planter) predeceased him. His youngest brother Lakshman who was in Geneva as an I. L. O Advisor, has resumed practising as an advocate in Sri Lanka.

The late Mr. Sam Kadirgamar was a grandson of the late Mudlr.K.C and Mrs.Kadirgamar, and of the late Mr. & Mrs. Edward Mather of Manipay.

A service of Thanks Giving will be held on the 15th of March and his ashes will be interred at the General Cemetery Kannatte on the 17th. of March 1990.

## Publications for Sale

"The Word, Men & Matters"

In Five Volumes being the writings of
The Rt. Rev. Dr. S. Kulandran, Retired Bishop of the J D C S I.

Available for sale : C.L.S., Jaffna
Thiru Marai Illam, Jaffna
Jaffna College, Vaddukoddai
CISRS, Ashram, Maruthanamadam.

Rs. 200/- per set.

A. Kadirgamar
Acting Director, CISRS.

## Psalm 23

From the violence and tragedy of Sri Lanka comes this re-interpretation of a well known Psalm.

O God, you are my shepherd,
but I lack many things.
you lead me to dry lands
and leave me in the deserts to wander.
Many times my spirit is robbed of me.
I cried for justice within me.
I sought for justice in your name.

But all around me was cruelty, brutality and oppression.

When I walk through the valley of the shadow of death,
I fear and tremble.
For I am all alone.
I do not find your comforting hand beside me.

The table that you have prepared before me, O Lord,
it stinks with rotten food.
I am hungry and weak; but how can I partake of that food?

My enemies and friends scorn me and ridicule and laugh at me.
You annoint me with coals of fire.

God it hurts. It really hurts.
I am burnt and bruised all over.
I yearn for goodness,
for love, understanding and mercy.

Tell me, O God,
is there a place for me too in your house?

But still, I'll continue to hope in you.
I have nothing to hold onto.
except You, O God,
because you are my only hope,
my strength,
and comfort.

– Dev –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

மலர் 150 16 - 03 - 1990 [இதழ் 11


## சிந்தனை 50

ஏசாயா 10 : 20

கர்த்தரையே உண்மையாய்ச் சார்ந்திருங்கள் என்பது இறைவாக்குனன் ஏசாயா அன்று தந்த அறிவு இன்றும் பசுமையானது.

மனிதனை மனிதன் சார்ந்து மனிதனுக்கு விரோதமாக மனிதன் செயற்படும் செயற்பாடு மனித இனத்தை அழிவுக்கு நேராக வழி நடத்துமேயொளிய வாழ்வுக்கு வழிகாட்டுவதாக அமையாது என்று கண்டுணர்ந்த இறைவாக்குனன் கர்த்தரையே உண்மையாய்ச் சார்ந்திருங்கள் என்றார்.

சொந்த நலனுக்காகத் தலைவர்களைச் சார்ந்தும் தம்வசப் படுத்தியும் வாழும் மனிதன் இறைவனுக்குத் தூரமாகிக் கொண்டிருப்பதை மனிதன் உணருவதே இல்லை. இவ்வியல் பூக்கத்தையுடையவர்கள் சமூக வாழ்விற்கு வலுவூட்டுபவர்களாகவோ ஒளிகாட்டுபவர்களாகவோ இருக்கமாட்டார்கள் என்றுணர்ந்த இறைவாக்குனன் ஏசாயா கர்த்தரின் பக்கம் வாருங்கள் என்று அறைகூவல் விடுப்பதை ஏசாயா 10: 20 ஆம் வசனம் தொனி செய்கின்றது.

கர்த்தரைச் சார்ந்து இருப்பவர்கள் என்றுமே சோர்வுபட மாட்டார்கள். இவர்கள் என்றுமே தமக்கென்று வாழும் வாழ்வு இல்லாதவர்கள். கர்த்தரையே சார்ந்து கொண்டால், அவரால் வரும் அறிவும் ஆற்றலும் செயற்பாடும் அர்த்தமுள்ளதாகவும் ஆற்றலுள்ளதாகவும் இருக்கும் என்பது ஏசாயாவின் அறிவு. இவ்வறிவை அகில உலகிற்குத் தரவந்தவரே நம் மீட்பரும் மேய்ப்பருமாகிய கிறிஸ்து.

லூக்கா 4 : 1 - 12 இல் சார்ந்து வாழுவது யாரில் என்ற இழுவை நிலை ஒன்று கிறிஸ்துவுக்கு ஏற்பட்டது. இவ்விழுவை நிலையின் இறுதி முடிவு, கர்த்தரில் சார்ந்து வாழுதே சிறந்த வழி என்பதில் முற்றுப் பெறுகின்றது.

கர்த்தரில் சார்ந்து வாழும் போது இன்பம் என்ற சொல்லுக்கு இடம் இருப்பதேயில்லை. காரணம் கர்த்தரில் வழி விசாலமானது அல்ல அது ஒடுக்கமானது மத்தே 7 : 14 அவ்வழி உறுதியானது உவப்பானது. என்று அறிந்து எல்லாக் காலங்களிலும் நேரங்களிலும் கர்த்தரையே சார்ந்து செயல்படுவோம் வெற்றி கிட்டும் முற்றும் புதிய அனுபவமும் ஏற்படும்.

-வண. ஆ. வே. இயேசுதாசன்
வறணி

## உங்களுக்குத் தெரியுமா?

வாலிப ஆண்களும், பெண்களும் கிட்டத்தட்ட சம அளவில் பிரான்ஸ், பிரேசில், டென்மார்க், ஸ்வீடின் ஆகிய நாடுகளில் உள்ளனர் எனக் கூறப்படுகிறது.

உலகின் எந்தப் பகுதியையும் விட முதலில் சூரியோதயம் ஆவது, சைபீரியாவில் உள்ள "ஈஸ்ட் கேப்" என்ற பகுதியில்தான்.

## செய்திகள்.

### குருத்துவ அருள்பொழிவு.

தென்னிந்தியத்திருச் சபையின் யாழ் ஆதின வருடாந்தக் கூட்டத் தொடரின் மூன்றாம் நாள் பிரத்தியேகமான நாளாக இம்முறை அமைந்தது. யாழ் ஆதின ஊழியர்களுள் இருவர், யாழ் ஆதினக்குருமாராக, குருத்துவ அருள்பொழிவு பெற்றதே அதற்குக் காரணம். இவ்வருள் பொழிவு கடந்த மாசித் திங்கள் 24ம் திகதி காலை 7,30 மணிக்கு வட்டுக்கோட்டை ஆலயத்தில் இடம்பெற்றது அன்று சபைப் பிரதிநிதிகள். நண்பர்கள் சபைக் குருமார் ஆகியோரால் ஆலயம் நிறைந்திருந்தது

குருத்துவ அருள்பொழிவு பெற்ற அருள்திரு P.J. சூரியகுமார் அவர் நாவாலிச் சபையைச் சொந்த காலஞ் சென்ற I. பொன்னுத்துரை திருமதி N. பொன்னுத்துரை ஆகியோரின் மூத்த புதல்வராவார். இவர் சாலோம் நகர் சபையின் ஊழியனாக இருக்கின்றார்

அருட்திரு. E. P. சொலமன்ஸ் அவர்கள், வத்தளையைச் சேர்ந்த திரு. திருமதி. சொலமன்ஸ் ஆகியோரின் புதல்வரும் கீழ்மாகண ஊழியருமாவார்.

குருத்துவ அருள்பொழிவு ஆராதனையை ஆதினப்பேராயர். அருள் பெருந்திரு D. J. அம்பலவாணர் அவர்கள் நடத்தினார்கள். அருட்பொழிவு பெற்றவர்களின் தலைமீது, பேராயருடன் வணக்கத்துக்குரியவர்களான. D. R. அம்பலவாணர். ஐசக் செல்வரட்ணம், T. S. பிரேமராஜா, S. ஜெயநேசன், G. D ஆனந்தராஜன், T. தேவநேசன் ஆகியோர் ஆசிர்வாதக் கரங்களை வைத்தனர்

பரிந்து வேண்டல் ஜெபத்தை அருட்திரு. T.S. பிரேமராஜா இசைக்க, திரு. V. அற்புதஜெயம் பழைய ஏற்பாட்டுப் பாடத்தை வாசிக்க, திருமதி.நளினி ஞானமுத்து நிருபவாக்கியத்தை வாசிக்க திரு. ஜெரோம்போல் நற்செய்திப்பாடத்தை வாசித்தார்.

வட-கிழக்கு மெதடிஸ்த சபா சங்கத்தலைவர் அருட்திரு. T. W. ஜெயசீலன் அவர்கள் அருளுரை வழங்கினார் உடுவில் மகளிர் கல்லூரிப் பாடகர் குழுவினர் சிறப்புப்பாடல் பாடினர். ஆராதனை பேராயரின் இறையாசியுடன் இனிது நிறைவு பெற்றது.

### நன்றி செலுத்தும் ஆராதனை

ஏழாலை வடக்குத் திருச்சபையைச் சேர்ந்தவரும், அனேக ஆண்டுகள், உடுவில் அ.மி பாடசாலையில் தலைமையாசிரியராகவும் இருந்து ஓய்வு பெற்ற திருவாளர். கார்த்திகேசு ஐசக் தேவதாசன் அவர்கள் 24.11.89 அன்று மறுமைக்குள் பிரவேசித்தார். அன்னாரின் சீவியத்திற்கான ஸ்தோத்திர ஞாபக ஆராதனை 27.1.90 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது. அவரது மருமகன் அருள்திரு. V. N. தர்மகுலசிங்கம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற அவ்வாராதனையில், திருமதி. சுகிர்தம் தயானந்தனால் தேவாரம் பாடப்பட்டது. திருமறைப்பாடங்கள், அன்னாரின் பேரப்பிள்ளைகளான, செல்வன் சாம் தர்மகுலசிங்கம், ஜெயதீபன் குணசிங்கம் ஆகியோரால் வாசிக்கப்பட்டது. திருமதி. இரத்தின மலர் சிவானந்தம் சிறப்புப்பாடல் பாடினார். திரு. அ. அருட்பிரகாசம் ஆசிரியர் இரங்கலுரை நிகழ்த்தினார். பின்பு அருள்திரு. V.N. தர்மகுலசிங்கம் அவர்கள் ",உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். யோவான் 14:1-ம் வசனத்தை ஆதாரமாகக் கொண்டு அருளுரை வழங்கினார். ஈற்றில் அடிகளாரின் ஜெபம், ஆசீர்வாதத்துடன் ஆராதனை இனிது முடிந்தது. சமுகமளித்த இனஜனசுற்று மித்திரட்கட்கு அன்னாரின் குடும்பத்தினரால் மதிய போசனம் அளிக்கப்பட்டது.

## மேடைதனில் முழங்கிடும் மேதையர்கள்.

- L. P. கனகரட்ணம் -

பாக்கள் பல வடிப்போம்
காற்றினிலே பறக்க வைப்போம்
ஏட்டினிலே எழுதியதை
எண்ணிடவே மறந்திடுவோம்.

மேடைதனில் முழங்கிடும்
மேதையர்கள் நாம்
வீட்டினிற்கே வந்தால்
விதி என்று விட்டிடுவோம்.

பிறமொழி கலாச்சாரம் - என்று
பிரிவினைகள் பேசிடுவோம்
பிறமொழி நாவில் வராவிட்டால்
பிச்சைக்காரன் என்று ஏசிடுவோம்.

சாதி இல்லை சமயம் இல்லை
சமத்துவம் வேண்டுமென்போம்.
சற்று திமிர்ந்தவன் பேசிவிட்
டாலே - அவன்
சாதிக் குணம் இதுவென்போம்.

நீர்மேல் எழுத்துப்போல
நிலை கொள்ளா வார்த்தைகளை
வாய்மேல் பேசி இங்கே
வந்ததோர் இலாபமென்ன?

பார் நீ மானிடனே
பரந்து பட்ட பாரினையே
எடுப்பாய்ப் பேசிவிட்ட
உன் பகட்டான வார்த்தைகளை

ஏர் கொண்டுழுது
எடுத்து நீ நீர்ப்பாய்ச்சி
பாரினில் ஓட்டிடு
உன் பாதையை மாற்றிடு

காற்றினிலே பேசிவிட்டுக்
காத்திருந்து பயன் என்ன?
வினையிலே காட்டிடு
விளைவினைப் பார்த்திடு.

### தண்டனை:

புத்தகங்கள், பத்திரிகைகள் அச்சடிக்கும் பொழுது எழுத்துப் பிழைகள் ஏற்படுவது புதுமை அல்ல. ஆனால் பரிசுத்த வேதாகமம் அச்சிடும்போது தவறுகள் ஏற்படுவது அரிது.

1638 ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்ட வேதாகமத்தில் ஏற்பட்ட எழுத்துப் பிழைக்காக 3 ஆயிரம் பவுன் அபதாரமாக விதிக்கப்பட்டு உள்ளது.

### உங்களுக்கு தெரியுமா?

நம் உடல், நன்கு செய்யப்பட்ட கடிகாரம். சரியாகவே அது மணி காட்டும். ஆனால், நாம் அதை தவறாக உபயோகிப்பதால் அலாரம் முன் கூட்டியே அடித்து விடும்.

—பிஷப் ஹால்.

## லெந்தென்னும் நோன்பு நாட்கள்.

### ஆன்மீக பெலம் உடல் பெலத்தை விட மேலானது.

Rev.V.N.T

உடல் பெலத்திற்கு சத்துணவு வேண்டும். ஆன்மீக பெலத்திற்கு உபவாசம் வேண்டும். உடல் பெலமும் ஆன்மீக பெலமும் நமக்கு வேண்டும். உடல் பெலத்தை விட்டு ஆன்மீக பெலத்தையோ அல்லது ஆன்மீக பெலத்தை விட்டு சரீர பெலத்தையோ ஆண்டவர் நம்மிடம் காணவிரும்பவில்லை. அவர் சரீர ஆன்மீக பெலத்தின் முழுமையை நம்மிடம் காண விரும்புகிறார். சரீர பெலத்தை ஒரு ஒழுங்குக்குள் நெறிப்படுத்துவது ஆன்மீகமாகும். ஆன்மீகத்தை இழந்த மனிதன் மண்ணுக்கு மாத்திரம் சொந்தமானவன், அவன் இறைவனின் சாயலிலிருந்து விடுபட்டவன், இன்னொரு விதத்தில் பாவத்திற்குட்பட்டவன். இந்த நிலையிலிருந்து அவன் விடுபடவேண்டும். அதுதான் மீட்பு அல்லது இரட்சிப்பு. இந்த இரட்சிப்பு கிறிஸ்துவால் நமக்குக் கிடைத்த நற்செய்தி.

இந்த வேளையில் ஆன்மீகம் பற்றி நமது சூழலில் வாழும் சைவ மக்களின் கருத்து என்ன என்பதையும் சுருக்கமாக குறிப்பிடுகிறேன். ஆன்மா ஒருபோதும் மரிப்பதேயில்லை. ஆனால் அது மனித உடலில் செயல்படும்போது வண்டியில் பூட்டிய குதிரைபோல் சரீர பெலத்தால் அடக்கப்படுகிறது. அந்த அடக்குமுறையை மூன்று வகையில் காண்பர். அவைகளாவன பிராணயம், அன்மையம், விஞ்ஞான மயம் என்பவை பிராணயம் என்பது உடலில் உயிர் இருக்கும்வரை உள்ள சரீர பெலம், இது ஆணவம் எனப்படும். அன்னமயம் என்பது தூய சரீரத்தின் உறுப்புக்கள் உணவினால் பெலம் பெற்று செயல்படுவது, இது கன்மம் எனப்படும். விஞ்ஞானமயம் என்பது மனிதன் உலக அறிவுக்குள் அமிழ்ந்து தெய்வ அறிவை மறந்து வாழும் மயக்கம் இது மாயை எனப்படும். இந்த ஆணவம், கன்மம், மாயை ஆகிய கட்டுக்களில் இருந்து விடுபட்டு இறைவனடி சேர்வது முத்தி எனப்படும். இங்கே ஆன்மீகபலம் சரீர பெலத்தால் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது.

நமது கிறிஸ்தவ திருமறை மனிதனைப் பற்றிக் கூறும்போது அவன் மண்ணுக்குரியவன் அதேபோல் விண்ணுக்குரியவன். மண்ணில் மனிதனை உண்டாக்கிய ஆண்டவர் அவனுக்கு சுவாசத்தை ஊதி விண்ணுக்குரியவனாக ஜீவாத்துமாவாகப் படைத்தார். இது ஆதியாகமம் நமக்குத் தரும் விசுவாச வரலாறாகும். சரீர பெலத்தை ஒரு ஒழுங்குக்குள் நெறிப்படுத்துவது ஆன்மீக பெலம் இதுவே கிறிஸ்து நமக்குக் காட்டிய வழி.

ஆன்மீக பெலத்தையும் சரீர பெலத்தையும் பிரித்து நோக்குவோமாயின் இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானது. நாம் காணும் சரீர பெலம் பணம், பொருள், செல்வாக்கு ஆகிய உலகப்பிரகாரமானவற்றால் வெளிப்படுவதாகும். ஆன்மீக பெலம் பணம், பொருள், செல்வாக்கு ஆகியவற்றின் பெலவீனத்திலிருந்து வெளிப்படுவதாகும். திருந்திய மைந்தன் உவமையை நாம் நோக்கினால். அவனிடம் பணம்,பொருள், செல்வாக்கு இருந்தபோது சரீர பெலம் கிரியை செய்தது. அவன் அவற்றை இழந்து பெலவீனனான போது தந்தையை நினைக்கவும் அவரண்டை செல்லவும் துணிந்தான்.

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாரகை ஒளி:

துன்மார்க்கன் தன்முகம் கடினப் படுத்துவான்;
செம்மையோர் தம்வழி நேர்மைப் படுத்துவர்.

— நீதிமொழிகள்- 21: 28 —

# எங்கள் கருத்து

## கிறிஸ்தவரும் கிறிஸ்தவரல்லாதவரும்

பொதுவாக நாம் பிறசமய மக்களைக் 'கிறிஸ்தவரல்லாதவர்' என்று கூறுவது வழக்கம். ஆனால் இச்சொற்றொடர் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு முரணானது. ஏனெனில், ஒருவரை நாம் கிறிஸ்தவரல்லாதவர் என எப்படி நிச்சயமாகக் கூறலாம்? மனுமக்கள் அனைவர்க்காகவும் கிறிஸ்து சிலுவையில் மரித்தார். அனைவரும் இறைவனின் அன்புக்கும் திருப்பணிக்கும் உரிமையுள்ளவர்கள். எல்லாரும் அவரின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள். எல்லோரிலும் இறைவனின் ஆவி செயல்படுகிரது. அனைவரும் இறுதியில் கிறிஸ்து யேசு பெருமானால் நியாயந் தீர்க்கப்படுவார்கள். எனவே, அவர்கள் அதை அறிந்திருந்தாலும், அறியாவிடிலும், ஏற்றாலும் ஏற்காவிடினும் எல்லோருக்கும் இதுவே முடிவு.

ஒரு குறிப்பிட்ட நபரைக் கிறிஸ்தவரல்லாதவரெனச் சொல்வது எளிது. அங்ஙனம் கூறுவதில் தவறில்லையெனவுங் கருதலாம். எனினும் 'கிறிஸ்தவர் அல்லர்' என்ற சொற்றொடர், செயலைக் காட்டுகிறதேயன்றி பண்பை அல்ல; அதாவது, ஒருவர் செய்ததையோ அல்லது செய்யத்தவறியதையோ தான் குறிக்கின்றது. ஒருவன் கிறிஸ்தவன் அல்லன் என்றால், அவன் கிறிஸ்து யேசுவைத் தன் ஆண்டவராக ஏற்கவில்லை என்பதே பொருள். இருந்தும், அவனும் கிறிஸ்துவின் ஆளுமைக்குள் உட்பட்டவன் என்பதை நாம் மறக்கமுடியுமா?

கிறிஸ்தவம் தனித்தன்மை வாய்ந்தது பிறரையும் ஈர்க்கும் இயல்புடையது. இந்த அடிப்படையில்தான் கிறிஸ்தவர்க்கும், கிறிஸ்தவரல்லாதவர்க்கும் உள்ள உறவு நிலவ வேண்டும். கிறிஸ்தேசுவிலுள்ள கடவுளின் அன்பை ஒருவன் அறியாமலிருக்க அல்லது ஏற்காமலிருக்க ஏதாவதொரு காரணமிருக்கலாம். ஆனால், இதனை ஏற்காமலிருந்தால் இறைவனின் அன்பு அவனிடத்தில் செயற்படாது. இது எவரிடத்தில் நிறைவேறுகிறதோ அவரிடத்தில் அவ்வன்பு பாய்ந்தோடி, அவருடைய வாழ்க்கையையும் அவரைச் சார்ந்தோரின் வாழ்க்கையையும் வளம் பெறச்செய்யும், என்பதை அவர்கள் அறியவேண்டும்.

கிறிஸ்தவரல்லாதவர்களை எங்ஙனம் மதம் மாறச் செய்வது என்பதல்ல நமது பிரச்சனை. மதமாற்றஞ் செய்ய நாம் அனுப்பப்படவில்லை. ஏனெனில், ஏற்கனவே அவர்களும் கிறிஸ்துவின் மீட்பின் கிரியைக்குட்பட்டவர்கள். இந்த மனப்பாங்குடன் நாம் கிறிஸ்தவரல்லாதோருடன் பழக வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் தம் வாழ்க்கையில் இறைவன் எவ்விதம் செயலாற்றுகிறார் என்பதை அறிவார்கள். கிறிஸ்துவைப் பற்றிப் பிறரிடம் பறைசாற்ற விழைகின்றோம். ஆனால், அவற்றைப் பற்றி இவர்கள் நன்கு அறியாமலே சொல்லும் செய்திகளுக்கு நாம் செவிசாய்க்கிறோமா?

'விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. நீங்கள் புறப்பட்டுப் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்'. (மத்.28:18,19) என்பது இயேசு பெருமானின் கட்டளை. ஆகவே அவரின் அடியார் எங்கும் போகலாம், எவரிடமுஞ் செல்லலாம். ஏனெனில் எங்கும் எல்லோர் மீதும் இயேசுபிரானுக்கு அதிகாரமுண்டு. எல்லா மனிதரும் — கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவரல்லாதோரும் — கிறிஸ்துவின் ஆளுமைக்குட்பட்டவர்கள். ஆகையால், ஒருவருக்கொருவர் உறவினர்: இந்த உண்மையை இச்சிலுவைத்தியான நோன்பு நாட்களில் நாம் உணர்ந்து, தியாகசிந்தையோடு செய்யும் பணிகளில் தியாகேசனாம் இயேசுவை மற்றவர்கள் காணச் செய்வது நம் கடமை.

—யோ. 10:16

## துன்பத்தின் மூலம் விடுதலை

5-ம் பக்கத் தொடர்ச்சி

கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்புவதற்காக விட்டார். பவுல் அடியரும் அநேகம் தரம் காவலிலும், மரண அவஸ்தையிலும், அடிவேண்டியும், கல்லெறியும் வேண்ட வேண்டி இருந்தது இறுதியில் உரோமா புரியில் நீரோ மன்னன் காலத்தில் கிறிஸ்துவுக்காக ரத்தச் சாட்சியாக மரித்தார். இவரின் பாடுகளால் தான் புறஜாதிகளுக்கிடையில் கிறிஸ்துவின் நற்செய்தி அதிகமாக பரவியது

இவர்களை விட பல பக்தர்களின் வரலாறுகளை நாம் சற்று பார்ப்போம். தலைகீழ்புனிதர் என்று அழைக்கப்படும் அசீச நகரத்து பிரான்சியஸ் அடியாரைப் பற்றி அறியாத கிறிஸ்தவர்கள் இருக்க முடியாது. இவர் செல்வந்த குடும்பத்தில் ஆரம்பத்தில் ஆடம்பர வாழ்வில் வாழ்ந்தாலும் பின் வறியவர்களையும் குஷ்டரோகிகளையும் கண்டுதன் வாழ்வை முற்றாக வே மாற்றி ஒரு சாக்குத்துண்டை ஆடையாக அணிந்து துறவற வாழ்வை மேற்கொண்டதோடு அநேகநோயாளிகளுக்கு ஆதரவு கொடுத்தார். 1840 ம் ஆண்டு தைமாதம் 3ம் திகதி பெல்ஜியம் நாட்டில் பிறந்த பிதா டேமியன் என்ற குருவானவர் தனது பாடுகளினால் குஷ்டரோகிகளின் நண்பன் எனப் பெயர் பெற்றதோடு தானும் குஷ்டரோகியாக மாறி 1889 இல் மரித்தார் இவரின் பாடுகளால் காவாய் நாட்டில் மொலக்காயிலுள்ள அநேக குஷ்டரோகிகள் நன்மை பெற்றனர்

ககாவா என்ற யப்பானிய புனிதர் தனது வாழ்வை சேரிகளில் வாழும் உணவு, உறையுள், உடை இன்றி தவிக்கும் மக்களுக்காக அர்ப்பணித்தார் இதனால் இவரை சேரிகளின் புனிதர் என்றனர். தொழிளால மக்களின் பலன் கருதி பல சங்கங்களையும் அமைத்தார். அத்துடன் உண்மையாக வாழ்வது எப்படி என பல புத்தகங்களும் எழுதினார்.

இற்றைக்கு 110 வருடங்களுக்கு முன் ஓர் இளம் பெண் சீருடையணிந்து ஓர் கையில் விளக்கு ஏந்தி நோயாளிகளுக்காக பெற்றோரினதும் சமூகத்தினரின் எதிர்ப்புக்கள் மத்தியில் தன்னை அர்ப்பணித்து பாடுபட்டார். அதன் பலனே நாம் இன்றும் காணும் மருத்துவிச்சிப் பணியே ஆகும். இந்த அம்மையார் தான் ''புளோரன்ஸ் நைன்டிங் கேள்'' ஆவர்.

அமெரிக்காவில் கறுப்பின மக்களின் விடுதலைக்காக தன்னையே தனது 39 வயதில் அர்பணித்த மாட்டின் லூதர் கிங் ஐ எடுப்போமாயின். இவரின் வாழ்வினால் சகல மனிதரும் சமத்துவமானவர்கள் எனக் காட்ட முற்பட்டார். அதனாலேயே துப்பாக்கி சூட்டுக்கு பலியானார். இவர் ஓர் மத குருவாக இருந்து உண்மைக்காக பாடுபட தயங்கவில்லை. இதனால் தான் அமெரிக்கா நாட்டில் விடப்படும் இரு விடுமுறை நாட்களில் ஒன்று இவரது நினைவுநாளாக இருக்கின்றது. மேற்கூயறிவர்களை விட இன்னும் வரலாற்று புத்கங்களில் பெயர் பொறிக்கப்படாத பெரியோர்களும் வாழ்ந்திருக்கின்றார்கள். மக்களுக்காக பாடுபடும் பெரியோர்களால் எண்ணுக்கடங்காத நன்மைகளே கிடைக்கின்றன ஆனால் தனிப்பட்ட அவர்களின் வாழ்வை நாம் பார்ப்போமாயின் துன்பங்களின் ஊடாக செல்வதை அறியலாம்.

துன்பம் தனிப்பட்ட ரீதியாக அல்ல ஒரு சமுதாய ரீதியாக வாழும் போது ஏற்படுகின்றது. அவற்றில் இருந்து விடுபடுவதற்கு பலபாடுகள் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டும் இஸ்ரவேல் மக்கள் எகிப்திலே கிட்டத்தட்ட 430 வருடங்கள் அடிமையாக இருந்து பின்பு 40 வருடவனாந்தர பயணம் மேற் கொண்டு தமது நாட்டை அடைந்தனர். அப்போது ஏற்பட்ட துன்பங்களினால் சிலர் முறுமுறுத்தனர் சிலர் எதிர்த்தனர். இறுதியில் நன்மையைப் பெற்றனர் இந் நாட்களிலும் நாம் அறிந்திருப்போம். சோவியத் யூனியனில் ஆர்மேனியாவில் நடைபெற்ற புவி அதிர்ச்சியைப் பற்றி. இவ்விபத்தில் பல உயிர்கள் அழிக்கப்பட்டன, பலர் அங்கவீனர்களாக்கப்பட்டனர், பல உடமைகள் அழிக்கப்பட்டன, பல சேதமாக்கப்பட்டன ஆனாலும் இவற்றின் மத்தியிலும் நன்மைகளும் இல்லாமல் இல்லை. ரஷ்யாநாடு முன்பு தனித்து வாழ்ந்து கொண்டிருந்தது. இவ்விபத்து நடை பெற்றவுடன் ஒரு வேறுபாடும் இன்றி உலகில் உள்ள அநேக நாடுகள் உதவி செய்தன ரஷ்யாவும் புவியதிர்ச்சி சம்பந்தமான செய்திகளையும் நன்கு அறிவித்தது. எனவே பல பாடுகளின் மத்தியிலும் எல்லா நாடுகளிற்கிடையே ஒற்றுமையும் மனிதாபிமானமும் நன்கு வளர்ந்து பல சமாதான ஒப்பந்தங்களும் வளர்கின்றதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது பாடுகளின் மூலம் விடுதலை, சமாதனம் கிடைப்பதை நாம் அறியலாம். மனுக்குமாரனும் மனுமக்களுக்காக மண்ணுலகில் மண்ணுரு எடுத்து பல பாடுகளை அனுபவித்தார் அதனால் மனுக்குலம் மீட்படைந்தது

''அப்படியே மனுசகுமாரன் ஊழியம் கொள்ளவாரமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருட்டு தமது ஜீவனை கொடுக்கவும் வந்தார்,'' (மாற்கு 10 : 45)

இதை நன்கு உணர்ந்தவராக நாம் வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம். எமது இன்னல்களுக்கு காரணம் நமக்கு தெரியாமல் போகலாம். ஆனால் எல்லாவித கஷ்டங்களுக்கூடாகவும் கடவுளின் மகிமை தெரிகின்றது. அதாவது கஷ்டங்களிலும் ஏதோ நன்மை அல்லது விடுதலை உண்டாகின்றது என்பது திண்ணம். இலகுவான சௌகரியமான வாழ்வுக்கூடாக நாம் காண முடியாத பல உண்மைகளை, அனுபவங்களை பாடுகளுக் கூடாக நாம் கற்றுக்கொள்ளலாம். பாடுகள் எம்மை ஆதரித்து பலமளித்து ஆறுதலளிக்கும், கடவுளிலே விசுவாசம் வைக்க அது எம்மை தூண்டுகிறது. எனவே பாடுகள் தொல்லைகளைக் கண்டு சோர்வடைய தேவையில்லை. இவற்றின் மத்தியில் வாழ்ந்து மற்றவர்களுக்கு உதவுவதற்கு முன்வரவேண்டும்.

### உங்களுக்கு தெரியுமா?

இன்பம் எனும் கனி நம் வீட்டில் விளையாவிடில் பிறர் தோட்டங்களில் பறிக்க முயலும் போது அது விசமாக மாறும்.

கழிந்த வாழ்வை நினைத்து மகிழ முடியுமானால் இரு முறை வாழ்ந்தவராவோம்.

—மார்ஷியல்.

துக்கமில்லாமல் வாழ்வது பகுத்தறிவில்லாத மிருகத்திற்கும் முடியாது. பகுத்தறிவை உபயோகிக்காத மூடனுக்கும் முடியாது. பகுத்தறிவை, பரிகாரமாக உபயோகிக்கும் அறவோருக்கே முடியும்-

—எமிக்டெட்டஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலுவைமீதொரு மனிதன்

இரவிலோ பகலிலோ என்றனைச் சூழவே
அசைவிலா அமைதியே அடுத்திடும் போதிலே
சேய்மைப் புலம்பல் செவிப்புலம் பட்டிடும்;
முதன் முறை கேட்டேன், முடுகியே எழுந்து
தேடினேன் ஓடினேன் தெருவுக்கு மப்பால்;
சீரார் மனிதனைச் சிலுவையில் கண்டேன்,
கைகளில் கால்களில் ஆணியுங் கண்டேன்.
கசிகிற இரத்தமும் காதலுங் கண்டேன்.
'ஐயகோ, ஐயனே, அங்கிருந்துன்னை
விடுவிப்பனெ' ன்றே விரைவுடன் சென்று
கால்களின் ஆணியைக் கழற்றிடத் தொட்டேன்:
'அப்பப்ப நில்' லென்(று) அன்புடன் சொன்னான்,
'ஆணியைக் கழற்றல், ஆணியை கழற்றல்,
அவனியில் வாழ்த்திடும் ஆண்களும் பெண்களும்,
சிறுவரும் யாவரும் சேர்ந்துமே வந்தால்
ஆணியைக் கழற்றலாம் அல்லது வேண்டா'
என்றவன் சொன்னதும் ஏங்கியே நின்றேன்;
'ஐய வுன் புலம்பல் அசைக்குதென் நெஞ்சை
என்னவோ செய்தல்?' என்று நான் கேட்டேன்,
உலகெலாம் சென்று நீ ஊரெலாங் கூவி
அலகிலா நோவுடன் ஆங்கொரு மனிதன்
சிலுவையில் தொங்குகின்றா னெனச் சாற்றுவாய்
என்றனன், நெஞ்செலாம் இளகிய தன்றே!

—(ஆங்கிலக் கவிதை: The Man On The Cross.
தமிழாக்கம்: பொ. ஆ. ச.)

## ஓடுவேனோ, நான் ஓடுவேனோ.

ஓடுவேனோ நான் ஓடுவேனோ
தேடும் மேய்ப்பன் இருக்கையில்
நான் ஓடுவேனோ.

பாடு துன்பம் வருத்தினாலும்
ஓடுவேனோ
பாவம் என்னை நெருக்கினாலும்
ஓடுவேனோ.

காடு போல பாவம் சூழ ஓடுவேனோ
கரடு முரடு வாழ்வு ஆக ஓடுவேனோ
சாபம் என்னை நிறைத்த போதும்
ஓடுவேனோ
சர்வன் அன்பை மறந்து நானும்
ஓடுவேனோ ஓடுவேனோ.

வாக்குத்தத்தம் மறைந்தாலும்
ஓடுவேனோ
வல்ல செயல்கள் மறைந்தாலும்
ஓடுவேனோ
போக்குச் சொல்லும் மனிதர்களால்
ஓடுவேனோ
புறங்கூறி திரிவோரால் ஓடுவேனோ
ஓடுவேனோ

நாடும் செல்வம் வந்தபோதும்
ஓடுவேனோ
நல்ல வரங்கள் கிடைத்தபோதும்
ஓடுவேனோ
தேடும் மனிதர் வெறுத்தபோதும்
ஓடுவேனோ
தேனிலும் இனிய யேசுவைவிட்டு
ஓடுவேனோ.

பா+கிரான்ஜீவன்.

## துன்பத்தின் மூலம் விடுதலை

-S. I. ஆனந்தராஜா-
(C. T .S)

இயேசுபிரான் தம்பாடுகளின் மூலம் மகிமையடைவதாகக் குறிப்பிடுகின்றார் யோவான். இன்பமும், துன்பமும், வாழ்வும், சாவும் அவர் போதனையில் இருந்து வரும் கருத்துக்களே என்று குறிப்பிடுவதையும் நாம் அவதானிக்கலாம். கோதுமை மணிநிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்தேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். தன் உயிரைநேசிக்கிறவன் அதை இழந்து போவான்; இந்த உலகில் தன் உயிரை வெறுக்கிறவனோ அதை நிலையான வாழ்வுக்கென்று காத்துக்கொள்வான் (யோவான் 12: 24, 25) ஒரு பக்தன் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியம், உறவின் மூலமாகவே வாழ்வை அடைகின்றனான். (யோவான். 8: 51; 14: 45) கிறிஸ்துவில் ஐக்கியங் கொள்ளுகிறவன் அவர் வாழ்விலும் சாவிலும் ஐக்கியங் கொள்ளுகின்றான். யோவான் (14; 19: 15; 18-20) அவர் எங்கிருக்கிறாரோ அங்கு அவர் அடியானும் அவருடன் இருப்பான் (யோவான் 12; 26, 17:24) அவர் பாடுளில் பங்கடைகின்றான்.

இப்படியாக பாடுகள் அனுபவிப்பது கிறிஸ்தவ போதனையில் ஓர் முக்கியமான ஓர் அம்சம் ஆகும். திருச்சபையின் வரலாற்றில் கிறிஸ்தவ பக்தர்கள் பாடனுபவிப்பதைக் கிடைத்தற்கரிய ஒரு பேறாகவே கொண்டனர் எனக் காணலாம். அத்துடன் கடவுள் மானிடர்க்காக பல பாடுபட்டார் என்ற உண்மையை வலுவுறுத்திக் கூறுவர். கடவுள் வல்லமையுள்ளவர் எனவே பாடுகள் அனுபவிக்க முடியாது என்ற தப்பான கோட்பாடுகளை எதிர்க்கின்றனர். அப்பாடுகள் மூலமே முழு உலகையும் மீட்கின்றார் இறை மகன். நாம் துன்பங்களை அனுபவித்தாலும் அளவிடக் கூடாத நன்மையை, விடுதலையைப் பெற்று இருக்கிறோம்

இயேசுகிறிஸ்துவின் பாடுகளின் பின் அவருக்காக முதலாவது ரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவான் மூலம் அநேகர் கிறிஸ்துவை அறிந்து மீட்படையக் கூடியதாக இருந்தது கிறிஸ்துவின் காலத்திலேயே அவரைக் குறித்து சாட்சி கொடுத்த யோவான்ஸ்நானன் ஏரோது மன்னனின் பிழைகளை சுட்டிக் கண்டித்தபோது சிரைச் சேதம் செய்யயபட்டார். இவர்களின் பின் பேயாக்கோபு என்ற சூீனும் சிரச்சேதம் செய்யப்பட்டார். இவற்றை எல்லாம் அறிந்த மற்றைய சீடர்கள் கடவுளை விட்டு விலகி ஓடாமல் கடவுளுக்காக பாடுகளை அனுபவிக்க தம்மை தத்தம் செய்தார்கள். அதன் மூலம் அளவிடக்கூடாத இன்பத்தை விடுதலையை பெற்றார்கள். இதில் நிரோமன்னனால் உரோமாபுரியில் பேதுரு துன்புறுத்தப்படும் போது அவர் தன்னை கிறிஸ்துவைப் போல் இல்லாமல் தலைகீழாக சிலுவையிலே அறையும்படி வேண்டினார் தன் ஜீவனையும்

( மிகுதி 4ம் பக்கம் பார்க்க )

### என் அன்னை

என் அன்னை மரணத்தைக் கடந்து உயரிய ஒரு நிலைக்குச் சென்றிருக்கிறாள். என்மீது சொல்லொணா அன்பு கொண்டிருந்த என் அன்னை, இன்னமும் என்னை நினைக்கிறாள் என்னைத் தேற்ற ஆவல் கொண்டுள்ளாள். அவள் என்னோடு கொண்டிருந்த தொடர்பு அறுந்து போய் விட்டதென்று சொல்ல முடியுமா? எப்படிச் சொல்ல முடியும்?

—புனித அகுஸ்தின்.

## திருமறையைக் கொளுத்து.

—சௌந்தர்—

'இலட்சுமிபாய்! விரைந்து வா, அதோ திலகரின் வேதப்புத்தகம். அவனின் ஆழ்ந்த ஞானத்துக்கும் ஆத்ம தாகத்துக்கும் தடை போட்டு, அவன் மனத்தை மாற்றி, அவனை ஆட்கொண்டிருக்கும் அந்தப் புத்தகம். அதைத் துண்டு துண்டாகக் கிழித்தெறி. நெருப்பில் போட்டெரித்துவிடு. எரித்தபின், அந்தச் சாம்பரை வீதியில் எறிந்து விடு. இன்றே இப்புத்தகத்திற்கு ஒரு முடிவு தேட வேண்டும், சீக்கிரம், சீக்கிரம்''.

''பெரியோரே, என் உறவினரே, முதலில் அந்த வேதம் எதுவென்றே அறியேன், அதை எரிக்கவும் நான் துணியேன். அப்படி நான் எரித்தாலும், பிறிதொரு வேதம் என் கணவனுக்குக் கிடைக்காமலா போய் விடும்? இதை எரிப்பதன் மூலம், உலகிலுள்ள எல்லா வேதப் புத்தகங்களையும் எரித்து விட்டதாகுமா?''

எவரின் கூட்டுறவாலோ மனம் மாறி, மதமும் மாறி விடப்போவதாக எண்ணிய நாராயண வாமன் திலகரின் நண்பரும் உறவினரும், அவர் போக்கைத் தடுத்து நிறுத்த எண்ணங் கொண்டு, அவர் மனைவி இலட்சுமிபாயிடம், திலகரின் மனதைக் கவர்ந்த திருமறையைத் தீயிலிட எண்ணியபோது, அவர் மனைவி கொடுத்த பதில்தான் இது.

ஒரு நாள் திலகர், வேறொரு ஊருக்குச் செல்ல, புகைவண்டியில் ஏறியபோது, அவ்வண்டியில் இருந்த மேல் நாட்டு பெருமகனொருவர் தம்மருகில் இருக்கும்படி அவரை அமர்த்தினார் திலகரின் கையில் இராமாயணம் இருந்தது. வழியில் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, அப்புத்தகத்தைத் திலகர் திறக்குமுன், அருகில் இருந்த மேல் நாட்டவருடன் உரையாடல் தொடங்கிற்று. பல விடயங்களைப் பேசியபின், மதசம்பந்தமாகவும் உரையாடினர். திலகர் கூறினார்: ''நான் புத்தம் புது மதமொன்றைக் காணவிரும்புகின்றேன்'' என்று. அதற்கு மேல்நாட்டவர் கூறியது: 'நண்பரே, இரண்டு ஆண்டுகளில் நீர் ஒரு கிறிஸ்தவனாகி விடுவீர்! என்று கூறியபோது, திலகர் தன் மனத்தில்- 'இத்தனை கருத்தூன்றிப் பேசியும் இவர் என்னையே கிறிஸ்தவனாக்கி விடுவேன் என்கிறாரே. என்னே இவர் மடமை' என்று எண்ணி முடிப்பதற்குள், அந்த ஆள், ஒரு புதிய ஏற்பாட்டைத் திலகரிடம் கொடுத்து, அதனைப் படித்துச் சிந்திக்கும்படி கூறி, திலகரோடு செபித்து விட்டுச் சென்றார்.

திலகர், தனக்குக் கிடைத்த புதிய ஏற்பாட்டில் முதலில் படித்தது இயேசுபிரானின் மலைப் பொழிவேயாகும். இந்த அருளுரை, எங்கோ இருப்பதாக அவர் எண்ணிய கிறிஸ்து பெருமானை அவர் அருகில் நிறுத்தியது.

திலகரும் அவர் குடும்பமும், இராஜ்நந்கான் என்ற ஊரில், தனது வேலை கருதி நிலைத்தனர். அங்கு இந்து சமய மன்னரொருவர் ஆட்சி புரிந்து வந்தார். அவ்விடத்தில் பணியாற்றிய ஒரு 'பொலீஸ்' மேலாளர் திலகருக்கு 'கிறிஸ்து பெருமானின் குணநலன்கள்' என்ற புத்தகமொன்றைக் கொடுத்து அதனை வாசிக்கும்படி தூண்டினார். இரவு நேரத்தில் திலகர், மேலும் அதனை வாசித்து, அவ்விடத்திலுள்ள கிறிஸ்தவர்களுடன் மார்க்கங்களைப் பற்றிப் பேசவும் தர்க்கிக்கவும் தொடங்கினார். குறிப்பாகப் பிற மதங்களிலிருந்து, கிறிஸ்து மார்க்கத்தில் நம்பிக்கை வைத்து, கிறிஸ்து பெருமானைப் பற்றிக் கொண்டோரின் வரலாறுகளையே ஆவலுடன் படித்தார். பல கிறிஸ்தவ பெரியாருடன் நெருங்கிப் பழகி அவர்கள் அனுபவங்களைக் கேட்டறிந்தார்.

பம்பாயிலிருந்த கிறிஸ்தவத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். 1894 இல் திருமறையை நன்கு ஆராய்ந்து கற்றார். 'தியானோதயா' என்ற கிறிஸ்தவ பத்திரிகையில், தமது கருத்தோவியங்களை எழுதலானார்.

—(வளரும்).

### சிலுவைச் சிந்தனைத் துளிகள்!

- மோட்சத்திற்கு எட்டக்கூடிய ஏணி, சிலுவை ஒன்றே. — சிலுவையோர் புனித சின்னம்!
- நமது வாழ்க்கை இருபது வயதில் ஆரம்பிக்கிறதா? நாற்பதிலா? அல்லது அறுபதிலா? நீ எந்த வயதில் கல்வாரிக்கு வருகிறாயோ, அப்பொழுது தான் ஆரம்பிக்கிறது.
- சில ஆலயங்களில் இரண்டு மெழுகு வர்த்திகளுக்கிடையே இயேசுவின் சிலுவைக் காட்சியைப் படமாகவோ உருவமாகவோ வைத்திருப்பதை நாம் காணலாம். பாவிகளின் நேசராகிய கல்வாரி நாதனின் இருமடங்கிலும் உள்ளவர்கள் இரண்டு கொள்ளைக்காரர் என்பதை நாம் மறத்தலாகாது.
- இயேசுவின் திருவுடல் அடக்கம் செய்யப்பட்டிருந்த கல்லறையை மூடி முத்திரையிடப்பட்டிருந்த கல், உருட்டித் தள்ளப்பட்டது எதற்காக? அவர் வெளியே வருவதற்காகவன்று, சீடர்கள் உள்ளே நுழைவதற்காகவே!
- காலியாகக் கிடந்த கல்லறை' கடவுள் அரசுக்குச் செல்லும் நுழை வாசல். — உயிர்த்தெழுதலின் நம்பிக்கையில்லாத வாழ்க்கை இலக்கற்ற ஒரு பயணத்தைப் போல் உள்ளது.

**Editorial**

## An Uncharted Sea

Some 350,000 applicants have, according to news reports, forwarded their applications for 2500 vacancies in government schools. Normally the selection in done by the Ministry of Educational Services at one interview, at which the applicant presents his qualifications and his credentials. This year a new scheme of "Appeals" from protesters and of weight given to Janasaviya recipients (who have the basic educational qualifications) has made the recruitment more complicated and time-consuming.

Appointments in government service have no doubt to take account of the contemporary climate in the country. We live in an era of heightened sensitivities. At the same time we have to continue to proclaim through rhyme and reason that the golden blessings of PEACE in the land are closely entwined with an efficient and dedicated teacher-cadre in our secondary schools.

In this context, a valid point to be borne in mind is the dwindling ranks of male teachers in the Profession in Sri Lanka. According to recent educational statistics, there are more lady teachers in our schools than men... We do not subscribe to Bernard Shaw's jaundiced view that "High school is teaching you nothing except to become a high school mistress" But what we are concerned is the seriousness of the situation in Sri Lanka, where teaching as a vocation has lowered so precipitously making ambitious young men seek other fields and pastures. (49 per sent of the population of Sri Lanka are women, of whom 33 per cent are girls under 14)

Another trend in which education needs considerable re-thinking is the "beaten-track" syndrome that has afflicted the student population. The grind for grades has become a phoebia for the Jaffna student from the Fifth Standard Scholarship Examination to the G C E (A/L) Examination.

While we congratulate the 1130 Tamil students who have been successful at the V th std. Scholarship Examination last year (1989), what we are not happy about is that student performance at this examination, so early in a student's School career should be made a veneer of privilege for entrance to prestigious schools in the island without any recognition of a student's interests and aptitudes outside his academic pursuits.

It is good to encourage students to set their academic sights high but at the same time it is the duty of our schools as we face a new millenium, to see that the ambitions of our students (as Dr. Devanesan Nesiah has pointed out at the Chundikuli Prize giving) 'are not narrowly defined in terms of social prestige and economic status".

( Continued from page One )

The world economy was just beginning a shaky recovary from the recession of the seventies. Expenditure on armaments increased massively while famine stalked many parts of the globe notably Africa. . Mankind's blinkered stumble through history seemed set to be the same.

How different it all seems now. Where the eighties began with pessimism rife, we look to the nineties with far more hope and optimism than one could have dreamed possible.

A sea change in international affairs has taken place. A dramatic change as well in the individual lives of many has taken place. A dramatic change as well in the individual lives of many has taken place. The past decade has shown the nobler aspects of humanity brought to the fore as never before. The individual's yearning for freedom and justice and the willingness to pay any price for it transformed the latter half of the decade and especially the last year into one glorious paean of praise for freedom.

Fifty years after the commencement of World War II the barricades to freedom put up as a result of the two tyrants Hitler and Stalin were being torn down. Europe once divided was becoming whole again. Churchill's famous phrase "Iron Curtain" was threatened with oblivion. The cold war is no more with regional conflicts solved or being solved.

The catalyst for most of this has been a most remarkable man-Mikhail Gorbachev. Aptly named by Time Magazine as man of the decade it was he who set the wheels in motion. Whilst latterly he has been forced to react rather than to lead events, nevertheless he showed the pragmatism and vision needed to bring about these dramatic changes. Some credit too to that aging cold warrior Reagan for accepting Gorbachev and the hopes he held forth.

### What of Sri Lanka?

For our lovely Island the decade began in relative peace though with gathering thunder clouds on the horizon. The decade that ended has surely been the bloodiest in its long history. Initially Tamil versus Sinhalese then latterly Tamil versus the Indian Forces and Sinhalese versus Sinhalese. It will be a black chapter in our history which we will remember with much sorrow and little joy. Despite this the cloud overhead does appear to have a silver lining. If those who purport to be our leaders have imbued any wisdom at all from the past tragic years and also seen what has happened in the rest of the world there might yet be hope for our people.

### The Diocese in the Eighties.

In 1980 the Jaffna Diocese's boundaries extended from K.K.S. in the north to Usan - all within the Jaffna peninsula with the church in Colombo and the clinic in Paranthan being almost freakextension. At the beginning of 1990 the boundaries have been extended to Vavuniya with extensions now into the Batticaloa District in the East.

This dramatic growth has been the main story of our church in the eighties. From being a somewhat insular, middle class, conservative church it has now become a dynamic, vibrant church that has demonstrated through the hardest of times, its commitment to its peoples in their struggles. This identification with the poor, underprivileged and dispossessed has in turn resulted in this dramatic shift in the size and structure of the Diocese.

The outreach programmes of various sizes and variety have reached out to a population that was once not a significant part of the Diocese's membership. The middle class structure of its membership has been irreversibly changed for the better. The commitment to social and developmental aspects of life has rounded off the church's image.

During a period when many of its members, including clergy left for pastures green, the Diocese has actually grown. This speaks volumes for the dedication and energy of those stil there and their commitment to the service of their Lord and their community.

Many Day Care Centres, Vocational Training Centres, Farm Projects, Housing Projects, Children's Homes, Mobile Clinics, Teacher Training Programmes, new Churches, a Theological Seminary - the list seems endless. Of the established institutions the schools are once again leading the way in education. The not so successful aspects of the Diocese's work continues to be the two main hospitals that are still not fulfilling their roles. One other (and pardon me for mentioning it) is the lack of growth of this paper, the Morning Star, which while on the verge of its 150th anniversary is still restricted in content and style.

The failure of many young Christians to dedicate themselves to the service of their community must also be a cause for concern and must be addressed by the Diocese. Much has been achieved - much is yet to be done. May the nineties be as fruitful as the decade that has just ended.

*'Time present and time past.*
*Are both perhaps present in time future,*
*And time future contained in time past'.*

- T. S. Eliot -

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/89 News
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182,1st.Cross Street Jaffna on Friday, 23 Fubruary. 1990 and bublished bythe Rev. T. THEVANESAN,182,First Cross Street, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org